<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>

அசல் வழக்கு எண். 178/2021

இன்று 2024 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 4 ம் நாள் இன்று இந்த வா.சா.1ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.கே.ஆர்.கண்ணன்,B.A.,B.L., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

பெயர் : அப்பாத்துரை

தந்தை பெயர் : முத்துச்சாமி கவுண்டர்

வயது : 82

<u>முதல் விசாரணை</u>

வாதி ஆஜர். பிரதிவாதிகள் ஆஜர் இல்லை. வாதி மற்றும் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். தாவாவில் நான் வாதி.

நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கையில் கூறியுள்ள விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். அவை நான் கூறியவை தான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள கோருகிறேன். கீழ்க்கண்ட ஆவணங்களை எனது தரப்பில் குறியீடு செய்யக் கேட்டுக் கொள்கிறேன்.

16.12.1985 – விஜயலட்சுமி, சண்முகம், முத்தன், அருக்காணி இடையே ஏற்பட்ட தடபாத்திய பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1** ஆகும்.

12.02.1986 – சோமன், முத்தன் பெயரில் ஏற்பட்ட கிரய ஆவணத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.2** ஆகும்.

15.07.2008 – வாதி பெயரிலுள்ள கிரய ஆவணத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.3** ஆகும். (அசல் ஆவணம் வீட்டில் இருப்பதாக சாட்சி கூறுகிறார்)

11.08.2008 – வாதி பெயரிலுள்ள கிரய ஆவணத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.4** ஆகும். (அசல் ஆவணம் வீட்டில் இருப்பதாக சாட்சி கூறுகிறார்)

28.12.2020 – திருப்பூர் தெற்கு பெருந்தொழுவு பட்டா எண் 2490, 2492 சர்வே எண் 343/1ஏ, 343/ஏ2 சொத்துக்கான சிட்டா 2 எண்ணிக்கை கணினி நகல் **வா.சா.ஆ.5** ஆகும்.

28.12.2020 – திருப்பூர் தெற்கு பெருந்தொழுவு பட்டா எண் 1723 சர்வே எண் 346/2 சொத்துக்கான சிட்டா கணினி நகல் **வா.சா.ஆ.6** ஆகும்.

மேலும் ஆவணங்கள் குறியீடு செய்ய அவகாசம் கோரியதால் முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2024.04.04 14:38:38 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.